மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**M.C.O.P No. 8/2023**

2024ம் ஆண்டு மார்ச் மாதம் 1-ஆம் தேதி வெள்ளிக்கிழமை

ம.சா.1 (ஜெயராணி)

கு.வி (2ம் எதிர்மனுதாரர் தரப்பில்)

விபத்து நடந்தது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வரும் வாகனத்தை கவனிக்காமல் எனது கணவர் ரோட்டைக் கடந்ததால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் மதுரை அரசு மருத்துவமனையில் எனது கணவருக்கு 19.11.2022 முதல் 23.11.2022 வரை சிகிச்சை அளிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது கணவருக்கு தலை மற்றும் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டிருந்தது. அரசு மருத்துவமனையிலிருந்து விடுவித்த பின்பு வீட்டிற்கு வந்தீர்களா என்றால் வீட்டிற்கு வந்து வீட்டில் வைத்து சிகிச்சை அளித்தோம். ம.சா.ஆ.2 ஆவணத்தின் படி எனது கணவருக்கு என்ன காயம் ஏற்பட்டது என்றும், என்ன சிகிச்சை அளித்தார்கள் என்பதையும் அரசு மருத்துவமனையில் சிகிச்சை குறிப்பேட்டை வரவழைத்து நிரூபிக்க முடியும் என்றால் சரிதான். 04.12.2022 அன்று மீண்டும் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கும் போது விபத்து மூலம் ஏற்பட்ட காயங்களுக்காக அனுமதிக்கவில்லை என்றும், அவருக்கு ஏற்பட்ட வேறு நோய்க்காக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4யை பொறுத்து எனது கணவருக்கு விபத்து மூலம் ஏற்பட்ட காயங்களுக்காக தான் சிகிச்சை பெற்று வந்தார் என்பதை அரசு மருத்துவமனை சிகிச்சை குறிப்பேட்டை வரவழைத்து நிரூபிக்கலாம் என்றால் சரிதான். ம.சா.ஆ.4 04.12.222 முதல் 08.12.2022 வரை சிகிச்சை பெற்று வந்த ஆவணமாகும். நிரூபண வாக்குமூலத்தில் 04.12.2022 முதல் 21.12.2022 வரை சிகிச்சை பெற்று வந்ததாக தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4ல் விபத்தின் மூலம் ஏற்பட்ட காயங்களுக்காக சிகிச்சை பெற்று வந்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவருக்கு பிரேத பரிசோதனை செய்யவில்லை என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கையை

பார்த்தால் தான் அவர் எதன் மூலம் இறந்தார் என்பதை அறிய முடியும் என்றால் எனக்கு தெரியாது. ம.சா.ஆ.5 இறப்புச் சான்றிதழ் பெறும் போது இறப்பிற்கான காரணம் கூறிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் விபத்தின் மூலம் ஏற்பட்ட காயத்தினால் இறக்கவில்லை என்றும், வயது மூப்பின் காரணமாகவும், வேறு ஒரு நோயினாலும் தான் இறந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. தொழில் மற்றும் வருமானத்திற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனம் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் இழப்பீடு எதுவும் தரவேண்டும் பட்சத்தில் 1ம் எதிர்மனுதாரர் தான் கொடுக்க வேண்டும் என்றும் மோட்டார் வாகன சட்டம், பாலிசி விதிமீறல் இருப்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்அல்ல என்று சொன்னால் சரியல்ல. அடிப்படை ஆதாரம் இன்றி பல தலைப்பின் கீழ் இழப்பீடு கோரியிருப்பது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்தின் மூலம் ஏற்பட்ட காயத்தினால் எனது கணவர் இறக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை